

கோவை காந்திபுரத்தில் நடைபெற்று வரும் ”செம்மொழிப் பூங்கா கட்டுமானப் பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் கிரியப்பனவர், மாவட்டச் செயலாளர்கள் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் அ.ரவி, தளபதி முருகேசன், மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாநகர மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் மு.மா.ச.முருகன், ரகு துரைராஜ், மாநகர் மாவட்ட மகளிர் அணி தலைவர் சி.வி.தீபா, மத்திய மண்டலத் தலைவர் மீனா லோகு, பணிகள் குழுத்தலைவர் சாந்தி முருகன், வித்யா ராமநாதன் உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள மாநிலக் கல்விக் கொள்கையை மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் வகையில் எங்கள் கல்வி எங்கள் உரிமை என்ற தலைப்பில் திமுக மாணவர் அணி சார்பில் உரையாடல் நிகழ்ச்சி ஒன்று இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர், மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல்ஹாசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். முன்னதாக நிகழ்வின் நோக்கவுரையைத் திமுக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி நிகழ்த்தினார். காம்ரேட் டாக்கீஸ் சார்பில் கல்வியின் முக்கியத்துவம் குறித்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. திமுக மாணவர் அணி மாநிலத் துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் வரவேற்புரை நிகழ்த்தினார். திமுக மாணவர் அணி தெற்கு மாவட்ட அமைப்பாளர் பா.அருண்குமார் நன்றியுரை ஆற்றினார். மேலும், திமுக மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க இளைஞரணி ஆலோசனைக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா.இராஜேந்திரன் தலைமையிலும் மாநில துணைசெயலாளர். பேராசிரியர் சீனிவாசன், மாவட்ட அமைப்பாளர் அருன் பிரசன்னா, மாநகர அமைப்பாளர் கேபிள் சரவணன், முன்னிலையில் நடைபெற்றது இக்கூட்டத்தில். மாவட்ட துணை அமைப்பாளர்கள் லோகேஷ், கார்த்திகேயன், இளஞ்செழியன், பிரசன்ன ரமணன், மாாகர துணை அமைப்பாளர்கள், கலைசெல்வன், வெங்கடேஷ், சிவராஜ். கிரிதரன், சுகைல் ரஹமான், சிலம்பம் கோபி, உட்பட மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நிர்மலா ரவிச்சந்திரன் தலைமை!

# திண்டிவனத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திண்டிவனம், ஆக.23.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப் பட்டுள்ள உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 15ஆம் தேதி சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் திண்டிவனம் தீர்த்த குளம் அருகில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் கலந்துகொண்டு முகாமினை தொடங்கி வைத்தார்.

முகாமில் 8.9.மற்றும் 12 வது வார்டுகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை, முதியோர் ஒய்வூதியம், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் பயன்பாடுவதற்கும்,மின் இணைப்பு பெயர் மாற்றம்,சொத்து வரி உரிமம் பெற வேண்டி கோரிக்கை மனு அளித்தனர்.

இதை அடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ திண்டிவனத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அப்போது பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் விவரம் குறித்து துறை சார்ந்த அதிகாரியிடம் கேட்டு அறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ முகாமில் மனு கொடுத்தவர்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டுமெனஅதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

அப்போதுமுகாமில் பல ஆண்டுகளாக மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய முடியாமல் இருந்ததற்கு பெயர் மாற்றம் வேண்டி மனு அளித்தனர் இதேபோல் சொத்து வரி உரிமம் பெறுவதற்கும் முகாமில் மனு அளித்தனர். இந்த மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு மனு கொடுத்த பொது மக்களுக்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ உத்தரவினை வழங்கினார்.

உத்தரவை பெற்றுக் கொண்ட பொதுமக்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நீண்ட நாட்கள் தீர்க்கப்படாத இருந்தகுறைகளை உடனடியாக தீர்வு காணப்படுவதகா பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

முகாமில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்மாசிலாமணி, சேதுநாதன், திண்டிவனம் நகர செயலாளர்ஆசிரியர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகர மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி வெற்றி வேல்,நகர மன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன்,சரவணன்,பாஸ்கர் மாவட்ட தொண்டரணி தலைவர் பிர்லா செல்வம்,சுகாதார பணிகள் அலுவலர் செந்தில்குமார்,மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் ஆடிட்டர் பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி வி.எஸ். முருகன், மருத்துவர் அணி சூரிய பிரகாஷ்,நகர துணைச் செயலாளர் கௌதமன் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கேரள மாநில தி.மு.க. சார்பில் ஓணம் திருநாள் கொண்டாட்டம்!

### கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

திருவனந்தபுரம், ஆக.25–

கேரள மாநிலக் கழக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

உலகம் முழுவதும் உள்ள மலையாள மொழி பேசும் மக்கள் கொண்டாடும் பண்டிகை ஓணம் திருநாள் ஆகும். ஓணம் பண்டிகை பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது அதில் முக்கியமான நாளாக திருவோணம் விளங்குகிறது இந்த திருவோணம் அன்று புத்தாடை அணிந்து பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தி அன்று மதியம் கேரள பாரம்பரிய உணவு வகையான சத்யா என்னும் சைவ விருந்து பரிமாறி உண்டு மகிழ்வர்.

இந்த ஓணம் பண்டிகையை முன்னிட்டு மலையாள மொழி பேசும் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் ஆங்காங்கே இருக்கும் ஏழை எளிய மக்களும் இந்த ஓணம் பண்டிகையை கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தில் ஓணக்கோடி ,ஓணக்கிட் என்ற பெயரில் புத்தாடைகள் காய்கறிகள்



அடங்கிய தொகுப்புகள மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகள என்று பலவிதமான பொருட்களை வழங்குவது வழக்கம். கேரள மாநில திமுக சார்பிலும் பல வருடங்களாக இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அது போல இந்த ஆண்டு வரும் செப்டம்பர் 5 ஆம் தேதி அன்று திருவோணம் வருகிறது.

இந்த ஓணம் பண்டிகையை ஏழை எளிய மக்களும் கொண்டாடும் வகையில் தமிழக முதல்வர் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழக அரசு துணை முதல்வர் வருங்கால மன்னவர் எங்கள் இதயம் கவர்ந்த சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கட்டளைக்கு இணங்க கேரள மாநில திமுக சார்பில் இரண்டு இடங்களில் மிகப்பெரிய அளவிலும் மற்ற பகுதிகளில் ஆங்காங்கே இருக்கும் மாவட்ட கழகம் சார்பிலும் ஓணம் பண்டிகையை கொண்டாட முடிவு செய்து முதல் நிகழ்ச்சியாக வரும் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் புனலூர் டவுனில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் (எனது) தலைமையில் கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ் முன்னிலையில் ஓணம் ஆகோஷ ஊர்வலம் நடைபெறுகிறது.

ஊர்வலத்தை தென்காசி முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ.பத்மநாதன் கழக கொடியசைத்து தொடங்கி வைத்து கழக ஆட்டோ தொழிற் சங்கத் தொழிலாளர்களுக்கு ஓணக்கோடி வழங்குகிறார். கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகர்மன்ற தலைவர் பொன்.ஆசைத்தம்பி, கொல்லங்கோடு நகர்மன்ற தலைவர் ராணி ஸ்டீபன், கன்னியாகுமரி மாவட்ட கழக முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் சிற்றாறு ரவிச்சந்திரன் ஆகியோர் ஓணக்கிட் வழங்குகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ்,கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரி குமார் , துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி, அருண், மாவட்ட கழக அவைத் தலைவர் ஷாம் லால், அஜ்மல், அச்சு பிலால், சதாசிவம் ஆசாரி, ஏ.கே.நவாஸ்,ரினுராஜன் கிழக்கே கரை, பி.கே.பாபு, ஹரி, ஷாஜி வாலக்கோடு, லால்ஜி மோகன், ஷாலினி, ராணி ஆதித்யா, கீதா கிருஷ்ணன், ராமர், ஆரியங்காவு ஸ்டீபன் மற்றும் கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணியினர் கலந்து கொல்கிறார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமது வாழ்வை

# பாட்டாளிகள், உழவர்கள், ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஆக.24-**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுதாகர் ரெட்டி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் “தமது வாழ்வை பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுரவரம் சுதாகர் ரெட்டி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

தொடக்கக் காலத்தில் மாணவத் தலைவராக இருந்து, நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, பின்னாளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைவராக உயர்ந்தது வரை சுதாகர் ரெட்டி அவர்கள் தனது வாழ்வைப் பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தார்.

கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், தலைவர் கலைஞர் நினைவேந்தல் என அவர் தமிழ்நாடு வந்தபோதெல்லாம் அவரது அன்பையும் தெளிவான பார்வையையும் அருகில் இருந்து கண்டுணர்ந்திருக்கிறேன்.

நீதி மற்றும் மாண்புக்கான போராட்டத்துக்கு அவரது வாழ்வு தொடர்ந்து ஊக்கமளிக்கும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்தச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ”ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை திட்டத்தினை முன்னின்று செயல்படுத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பாராட்டு தெரிவித்து வேட்டி அணிவித்தார். அருகில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் என்.சத்தியா, எஸ்.உதயகுமார், ஜெ.சத்தியசீலன, ஜி.எஸ்.சீனிவாசலு, வி.மணிஷ்குமார், தொகுதி ஒருங்கிணைப்பாளர் எக்ஸ்பிரஸ் எல்லப்பன், எம்.குமார், சி.முகுந்தன் ஆகியோர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், தேரிழந்தூரில் நடைபெற்ற உங்களுடன்_ஸ்டாலின் திட்டத்தின் சிறப்பு முகாமில் மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஞான.இமயநாதன் மற்றும் பலர் உள்ளனர்.



அனைத்து திட்டங்களையும் ஒரே இடத்தில் உடனடியாக மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் சீரிய நோக்கில் ।உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் மோரனஹள்ளி மற்றும் ஊத்தங்கரை வடக்கு ஒன்றியம், வெங்கடதாம்பட்டியில் நடைப்பெற்ற திட்ட முகாமில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலா ளருமான, சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன்., அவர்கள் கலந்துகொண்டு திட்ட முகாமினை பார்வையிட்டு 16 பயனாளர்களுக்கு சான்றிதழ் வழங்கினார் உடன் மாவட்ட துணை செயலாளர் சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் சரவணன், தேங்காய் சுப்பிரமணி, குமரேசன், எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் , பேரூராட்சித் தலைவர் அமானுல்லா மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்